**சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.1** **02.07.2026**

**(மோட்டார் வாகன விபத்து வழக்குகள்)**

**விழுப்புரம்.**

**MCOP. No.263/2024**

**ம.சா.1 திருமதி. பாரதி, க/பெ. சந்தோஷ்**

2026–ம் ஆண்டு ஜூலை மாதம் 02–ம் தேதியன்று மனுதாரர் தரப்பு சாட்சியாகிய ம.சா.1–ன் வாக்குமூலம் (1873ம் ஆண்டு 10வது சட்டத்தின் விதிகளின் ஏற்பாட்டின்படி) திரு.நா.வெங்கடேசன்,D.C., B.A.,M.L., PGDCLCF., சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.1, விழுப்புரம் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு திரு. ச.கோபிநாத், இளநிலை உதவியாளர், அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு திருமதி.பா.முத்தழகி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்படுகிறது.

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த விபத்து சம்மந்தமாக நீதிமன்றத்தில் இருந்து மற்றொரு வழக்கில் ஆஜராவதற்காக அழைப்பாணை அனுப்பப்பட்டு பெறப்பட்டதா என்றால் எனக்கு விவரங்கள் ஞாபகத்தில் இல்லை. அந்த வழக்கில் நான் 1 வது எதிர்மனுதாரராக அந்த வழக்கின் மனுதாரரால் மனுவில் சொல்லப்பட்டு இந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர் மூலம் நான் ஆஜராகியுள்ளேன் என்று சொன்னால் சரியில்லை. அந்த விபத்து வழக்கில் மனுதாரர் இந்த சாலை விபத்து என் வாகனத்தை ஓட்டிய என் கணவரின் அதிவேகமும் மற்றும் அஜாக்கிரதையால் தான் நடந்தது என்று விபத்து தனக்கு ஏற்பட்ட காயத்தினால் தான் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிக்சையில் இருந்த காலத்தை பயன்படுத்தி கொண்டு காவல் நிலையத்தில் எனக்கு எதிராக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த விபத்தானது சாலையில் இரண்டு பக்கமும் பாரிகார்டு வைக்கப்பட்டுள்ள பகுதியில் தான் நடந்தது என்றால்சரிதான். ஆனால் நாங்கள் சாலையின் இடது ஓரமாக சென்றோம். இந்த விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தாரால் வரையப்பட்ட மாதிரி வரைபடம் பற்றி விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. விபத்தானது சாலையின் இடது புறம் நடக்கவில்லை என்றும் இரண்டு பாரிகார்டுக்கு மையத்தில் உள்ள சாலையில் தான் நடந்தது என்றால் சரியல்ல. நான் அமர்ந்தசென்ற வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை சேர்க்க வேண்டும் என்றும் அவ்வாறு சேர்த்தால் தான் நீதிமன்றத்தில் சரியான இழப்பீட்டு தொகையும் வாகனங்களின் அஜாக்கிரதை பற்றியும் முடிவுக்கு வர முடியும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் எனக்கு சொந்தமான வாகனத்தைஓட்டி சென்ற எனது கணவருக்கும் காயம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன். இந்த சாலை விபத்தானது இரண்டு இரு சக்கர வாகன ஓட்டியின் கவன குறைவால் நடந்துள்ளமையால் எனக்கு கிடைக்க கூடிய விபத்து நஷ்ட ஈடு 50 சதவீதம் தான் 1வது எதிர்மனுதாரர் வாகனத்திடம் இருந்து என்னால் கோர முடியும் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1வது எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டி சென்ற ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் எனக்கு கிடைக்ககூடிய விபத்து நஷ்ட ஈட்டு தொகையினை நான்

1வது எதிர்மனுதாரரிடம் தான் கோர முடியும் என்று சொன்னால் சரியல்ல. 1வது எதிர்மனுதாரர் வாகனத்துக்கு வழங்கப்பட்டுள்ள காப்பீட்டில் உள்ள ஓட்டுநர் சம்மந்தப்பட்ட விதிகள் முறையே 1வது எதிர்மனுதாரரால் பின்பற்றபடாததால் 2வது எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுப்படி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்து காலத்தில் நான் LIC முகவர் ஆவேன். Zonal Manager கிளப்பில் உறுப்பினர் ஆவேன். எனக்கான பாலிசி கமிஷன் 25 சதவீதம் ஆகும். முறையே கணக்கீடு செய்யாமல் நஷ்ட ஈடு கோரப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. விபத்து காலத்தில் எனது வருமானம் ஈட்டும் திறன் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என நிருபிக்கும் ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டுள்ள அசௌரியங்கள் குறித்து ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/−என்.வெங்கடேசன்,
சிறப்பு சார்பு நீதிபதி எண்.1
(மோட்டார் வாகன விபத்து வழக்குகள்)
விழுப்புரம்.